**தலைப்பு 233 - அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 233 - அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 11 ஆம் திகதி அரசாங்க பகுப்பாய்வாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 660.50 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 610.35 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 50.15 மில்லியன் அதாவது 7.59 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 248.25 | 244.65 | 3.60 | 1.45 |
| மூலதனம் | 412.25 | 365.70 | 46.55 | 11.29 |
| மொத்தம் | 660.50 | 610.35 | 50.15 | **7.59** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 8.50 | 4.86 | 4.50 | 6.22 | 32.00 | 18.09 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 2.13 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0003/000 | 1.60 |
| 6000/0000/00/0018/0004/000 | 0.49 |
| 6000/0000/00/0020/0051/000 | 0.04 |
| மொத்தம் | **2.13** |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களும் பேணப்படாமை**

நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் திணைக்களத்தால் பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

23301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான வரவு மீதிக்கும் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரமான வரவு மீதிக்கும் இடையே ரூபா 377,672 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,554 ஆக இருந்ததுடன் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து திணைக்களத்திற்காக ரூபா 654.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 237 பேர் சேவையினை வழங்குவதுடன் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2017.11 மில்லியனாக இருந்தது. எனினும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமும் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான 04 வாகனங்கள் 02 வருட காலமாக விளைவற்றக் காணப்பட்டன.

(ஆ) அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்று முறையான பிரகாரம் கையேற்கப்படாமல் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## 3.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

திணைக்களத்திற்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1) இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 செயலாற்றல்

திணைக்களத்திற்கு பரிசோதனையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பதற்காக கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் 2016 சனவரி 01 ஆந் திகதி வரையில் பரிசோதனை செய்வதற்கு 3,955 மாதிரிகள் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது 30,772 மாதிரிகள் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 34,727 மாதிரிகள் பரீட்சிக்கப்பட

வேண்டியிருந்தது. அதில் 29,783 மாதிரிகள் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேலும் 4,944 மாதிரிகள் 2017 ஆம் ஆண்டின் போது பரீட்சிக்கப்பட வேண்டியிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது பரீட்சிக்கப்பட வேண்டிய மாதிரிகளின் காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பரிசோதனை செய்யப்படாது கையிலிருந்த மாதிரிகளின் காலம் | மாதிரிகளின் எண்ணிக்கை | கையிலுள்ள மாதிரிகளின் எண்ணிக்கை சதவீதமாக |
|---|---|---|
| 01 வருடத்திற்குக் குறைவு | 3,219 | 65.1 |
| 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | 1,133 | 22.9 |
| 03 வருடங்களுக்கு மேல் 05 வருடங்களுக்குக் குறைவு | 253 | 5.1 |
| 05 வருடங்களுக்கு மேல் 10 வருடங்களுக்குக் குறைவு | 305 | 6.2 |
| 10 வருடங்களுக்கு மேல் | 34 | 0.7 |
| மொத்தம் | 4,944 | 100.0 |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 91 | 82 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 03 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 119 | 87 | 32 |
| (iv) | ஆரம்ப நிலை | 78 | 65 | 13 |
| | மொத்தம் | 298 | 237 | 61 |

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையில் 09 பதவிகளை உள்ளடக்கிய 61 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 07 வெற்றிடங்களுக்காக வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு பதில் கடமை படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மாத்திரம் அவ்வாறு செலுத்தப்பட்ட பதில் கடமை படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 334,224 ஆகும்.